# பதியத்தலாவ பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 27 ஆந் திகதி, கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பதியத்தலாவ பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பேரேட்டின் பிரகாரம் அனுமதிப்பத்திரக் கட்டணம் வருமானம் ரூபா 225,450 ஆக இருந்த போதிலும், வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 332,850 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 107,400 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பேரேட்டின் பிரகாரம் கடை வாடகை வருமானம் ரூபா 824,400 ஆக இருந்த போதிலும், அது வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 772,780 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானச் செலவினக் கணக்கில் பேரேட்டை விட ரூபா 51,620 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பேரேட்டின் பிரகாரம் சம்பளமும் படிகளும், போக்குவரத்து தொடர்பான தேவைகள், ஏனைய சேவைகள் மற்றும் ஓய்வூதியம் ஓய்வூதிய நலன்கள் மற்றும் பணிக்கொடைகளுக்காக செலவிடப்பட்ட செலவினம் முறையே ரூபா 10,219,657 , ரூபா 389,108 மற்றும் ரூபா 85,210 ஆக இருந்த போதிலும், அது வருமானச் செலவின கணக்கிற்கு முறையே ரூபா 11,073,564 , ரூபா 465,100 மற்றும் ரூபா 86,197 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலவினம், வருமானச் செலவுக் கணக்கில் முறையே ரூபா 853,907 ரூபா 76,082 மற்றும் ரூபா 987 ஆக அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பேரேட்டின் பிரகாரம் பிரயாணச் செலவுகள், வழங்கலும் உபகரணங்களும், வட்டி செலுத்துதல் மற்றும் மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தல் செலவினம் முறையே ரூபா 297,645 , ரூபா 3,044,681 ரூபா 29,070 மற்றும் ரூபா 887,173 ஆக இருந்த போதிலும் வருமானச் செலவினக் கணக்கிற்கு முறையே ரூபா 276,293 , ரூபா 3,028,868 ரூபா 26,280 மற்றும் ரூபா 771,835 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானச் செலவினக் கணக்கில் பிரயாணச் செலவினம் ரூபா 21,352

ஆகவும், வழங்கலும் உபகரணங்களும் ரூபா 15,813 ஆகவும், வட்டி செலுத்துதல் ரூபா 2,790 ஆகவும் மற்றும் மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தல் ரூபா 115,338 ஆகவும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 83,035 ஆக இருந்த போதிலும், அது ரூபா 117,270 ஆக ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பொதுக் களஞ்சியம் மற்றும் ஓவர்சியர்ஸ்களின் பிரதேசக் களஞ்சியமாக பலவருட காலத்திலிருந்து ரூபா 114,240 தொகை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், களஞ்சியங்களில் அந்த இருப்பு பௌதீகரீதியில் காணப்படவில்லை. அதனால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது புதிய கடைகளை வாடகைக்கு வழங்கியதால் பெறப்பட்ட முற்பெறுவனவுகள் (Key money) வைப்புப் பெறுமதியான ரூபா 45,000 ஐந்தொகையில் ரூபா 40,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) வைப்புப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கிடைத்த நூலக வைப்புக்களின் பெறுமதி ரூபா 11,375 ஆக இருந்த போதிலும், ஐந்தொகையில் ரூபா 9,000 ஆக உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

உள்ளூராட்சி சேவைகள் விதவைகள், அநாதைகள் நிதியத்திற்கு 2010 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய ரூபா 368,232 தொகையான பங்களிப்புப் பணத்தை செலுத்தித் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோப்பு | |
| (i) விதி 59 – 66 | பிரதேசத்தில் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு கைதொழில் வரி அறவிட வேண்டிய நிறுனங்கள் இனங்காணப்பட்டு அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 65 | கொடுப்பனவுகளைப் புறக்கணிப்பவர்களின் பெயர்ப்பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(iii) விதி 153 — வருமான நிலுவைத் தொகை தொடர்பான கூற்றொன்று பீ.எஸ்.07 படிவத்தின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை.

(iv) விதி 180 — காசு, களஞ்சியம் மற்றும் வருமானங்களைச் சேகரிக்கும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக செயற்படுகின்ற மூன்று உத்தியோகத்தர்களினால் பிணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம்

----------------------------------------

நிதிப்பிரமாணம் 1647(உ) — மோட்டார் வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 55,547 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 114,770 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 170,317 வீழ்ச்சியினைக் காண்பித்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------------

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதி விளைவுகள் தொடர்பான மீளாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அனுமதிப்பத்திரக் கட்டண வருமானத்தில் 18 சதவீத குறைவும், சேவைக் கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும், ஏனைய வருமானம் மற்றும் ஏனைய நிதியுதவி போன்ற வருமான மூலங்களில் 14 சதவீதம் முதல் 520 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பையும் காண்பித்திருந்தது.

(ஆ) மீண்டெழும் செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சம்பளக் கொடுப்பனவு, பிரயாணச் செலவினம், வழங்கலும் உபகரணங்களும், மூலதனச் சொத்துகளை பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் போன்ற செலவினங்களில் 18 சதவீதம் முதல் 153 சதவீதம் வரையான அதிகரிப்பும், ஓய்வூதியமும் பணிக்கொடையும் மற்றும் உதவிப்பணம், மானியம் போன்ற செலவினங்களில் 18 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் குறைவையும் காண்பித்தது.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியன வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 129 | 63 | - |
| வாடகை | 5,135 | 1,314 | 198 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 458 | 387 | - |
| சேவைகளுக்கான கட்டணம் | 605 | 710 | - |
| பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 34 | 1,228 | 203 |
| ஏனைய வருமானம் | 170 | 365 | 24 |

2.3.2 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபையினால் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுவதற்குரிய வருமானங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த போதிலும், அதில் பின்வரும் கைத்தொழில்களுக்குரிய சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வியாபார நிலையங்களுக்கு மீளாய்வாண்டிற்காக எந்த வித அனுமதிப்பத்திரமும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

I அச்சகம்
II மிளகாய் ஆலை
III தீக்குச்சி கடைகள்
IV கருங்கல் உடைத்தலும் தகர்த்தலும்
V ஆங்கில மருந்துகள் விற்பனை செய்யும் நிலையங்கள்
VI லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யும் நிலையங்கள்
VII மின் உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையங்கள்
VIII மணிக்கூடுகள் திருத்தும் நிலையங்கள்

2.3.3 அறிவித்தல் பதாதைக் கட்டணம் மற்றும் தொலைத்தொடர்பு கோபுரக் கட்டணங்கள்

2014 ஆம் ஆண்டிற்காக அறிவித்தல் பதாதைக் கட்டணத்தை அறவிடுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் எந்தவொரு அறிவித்தல் பதாதைக்கும் உரிய கட்டணத்தை அறவிடுவதற்கு சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற தொலைபேசிக் கோபுரங்களிலிருந்து ஒன்றைத் தவிர ஏனைய கோபுரங்களுக்காக வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் ரூபா 12,500 அளவிலான வருமானமொன்றை அறிவித்தல் பதாதை மற்றும் கோபுரக் கட்டணங்களாக சபை இழந்திருந்தது.

2.3.4 முத்திரைக் கட்டணம்

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணமான ரூபா 120,665 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது மஹஓய பிரதேச சபைக்கு பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற பெண் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 9,710 தொகையான இடர் கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையில் காணப்படுகின்ற 13 வாகனங்களில் 12 வாகனங்களின் உரித்தை சபையின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபையில் பதிவு செய்துள்ள 23 லொறி வண்டிகளிலிருந்தும் 56 முச்சக்கர வண்டிகளிலிருந்தும் அறவிட வேண்டிய ரூபா 125,000 கூட்டுத்தொகையான வருமானம் சபைக்கு அறவிட வேண்டியிருந்த போதிலும், அந்தப் பணத்தை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையில் வருமானத்தை அறவிடுவதற்கான உப விதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அந்த உபவிதிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு சபையினால் போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கான இயலுமை காணப்படவில்லை.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பிரதேச சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் பழுதுபார்த்தலுக்காக கராஜுகளுக்கு அனுப்பப்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக உரிய நிலையங்களில் துருப்பிடிக்கும் நிலையில் காணப்பட்ட போதிலும், சபையினால் மீண்டும் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 விளைவற்ற சொத்துக்கள்

---

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 4.1 மில்லியனுக்கு அண்மித்த தொகையொன்று செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவக் கட்டிடத்திற்காக தேவையான உட்கட்டமைப்பு வதிகள் வழங்கப்படாமையின் காரணமாக 2013 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியான 2015 யூன் 23 வரையும் அக்கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்